## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 09, 2017

**1. வட-கிழக்கு வணிக உச்சிமாநாட்டின் (North-East Business Summit) 11-வது பதிப்பு, எந்த நகரத்தில் தொடங்கியது ?**

A. புது தில்லி
B. இம்பால்
C. கவுகாத்தி
D. ஷில்லாங்

**விடை: A. புது தில்லி**

வட-கிழக்கு வணிக உச்சிமாநாட்டின் (NEBS) 11-வது பதிப்பு, 2017 மார்ச் 9-ஆம் தேதி புது தில்லியில் தொடங்கியது. 2 நாள் மாநாடானது, முதலீடுகளை எளிதாக்கும், வட-கிழக்கு பகுதியின் (NER) பலத்தை உயர்த்திக்கூறும் மற்றும் வட-கிழக்கு வழங்கும் வர்த்தக வாய்ப்புகளுக்கான முன்னெடுப்பாகும். வட-கிழக்கில் பயன்படுத்தபடாத வணிக சாத்தியக்கூறுகளை உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு இம்மாநாடு வெளிப்படுத்தும்.

**2. 'India by the Nile' கலாச்சார திருவிழா, எந்த நாட்டில் தொடங்கியது ?**

A. நைஜீரியா
B. எகிப்து
C. கென்யா
D. மொரிஷியஸ்

**விடை: B. எகிப்து**

'India by the Nile' மெகா கலாச்சார திருவிழா, எகிப்தின் கெய்ரோவில் உள்ள பிரமிடுகள் அடிவாரத்தில் மார்ச் 8-ல் தொடங்கியது, மார்ச் 14, 2017 வரை இது தொடரும். இந்த நிகழ்வு ஒரு சிறப்பு தருணம் ஏனெனில், இந்தியா அதன் 70-வது சுதந்திர தினத்தையும், எகிப்துடனான 70 ஆண்டுகால இராஜதந்திர உறவுகளையும் கொண்டாடுகிறது. மார்ச் 8-14 வரை நடைபெறும் கைத்தொழில் கண்காட்சி, இந்திய மற்றும் எகிப்திய கைவினைகளை ஊக்குவிக்கும் ஒரு முன்னெடுப்பாகும். ஜவுளித்துறை அமைச்சகம், இந்திய

அரசாங்கம், கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில் (இந்தியா), சமூக ஒருமைப்பாடு அமைச்சகம் (எகிப்து), எகிப்திய தொழிற்சாலை கூட்டமைப்பு (எப்இஜ) ஆகியவற்றுடன் இணைந்து இந்திய தூதரகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இந்திய இசை, நடனம், நாடகம், விஷுவல் ஆர்ட்ஸ், உணவு மற்றும் பொதுநலன் ஆகியவற்றின் கொண்டாட்டமாக திருவிழா உள்ளது.

**3. எந்த அமைச்சகம், பெண் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பெண் கைவினைஞர்களுக்காக "Kamaladevi Chattopadhya National Awards"-யை அறிமுகம் செய்துள்ளது ?**

A. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகம்
B. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்
C. ஜவுளி அமைச்சகம்
D. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**விடை: C. ஜவுளி அமைச்சகம்**

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி ஜுபின் இராணி, சமீபத்தில் பெண் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பெண் கைவினைஞர்களுக்காக "Kamaladevi Chattopadhya National Awards" எனும் புது வகை அறிமுகம் செய்துவைத்தார். இது தவிர, 'மஹிலா விகாஸ் மகிளா கே சாத்' மையக்கருவின் கீழ், நாடெங்கிலும் உள்ள பெண் கைத்தறி நெசவாளர்களுக்கு முத்ரா கடன்கள் வழங்குவதற்கு ஒரு சிறப்பு பிரச்சாரத்தை ஜவுளித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார். இந்தியாவின் Thigh reeling-ல் உள்ள சுரண்டல் மற்றும் சுகாதாரமற்ற நடைமுறையை அகற்ற ஒரு தேசிய பிரச்சாரத்தையும் அமைச்சர் தொடங்கி வைத்தார். ( வழக்கமாக tasar silk-ன் thigh reeling-யை பெண் குறு தொழில் முனைவோர் பயிற்சி செய்வர், ஓய்வு நேரத்தில் தங்கள் வீடுகளில் ஒவ்வொரு நாளும் வேலை செய்வர்.)

**4. எந்த வங்கி, வியாபாரிகளுக்காக ஆதார் செலுத்து சேவையை (Aadhaar Pay service) தொடங்கவுள்ள முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது ?**

A. ICICI வங்கி
B. HDFC வங்கி

C. Axis வங்கி
D. IDFC வங்கி

**விடை: D. IDFC வங்கி**

IDFC வங்கி, அதன் நெட்வொர்க் மூலம் பயோமெட்ரிக் அடிப்படையிலான 'Aadhaar Pay' டிஜிட்டல் செலுத்தும் முறையை அறிமுகம் செய்துள்ள முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது, இது மொபைல் போன்கள் இல்லாமல் கூட பணமில்லா பரிமாற்றங்கள் செய்ய அனுமதிக்கும். Aadhar Pay சேவை வியாபாரிகளுக்கானது, கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள், பின் மற்றும் கடவுச்சொல்லை கடந்து ஆதார் செயல்படுத்தப்பட்ட பணத்தை (Aadhaar-enabled payments) பெறும் வசதியை அவர்களுக்கு இது அளிக்கிறது.

**5. எந்த பொதுத்துறை வங்கி, ஊழியர்களுக்கு "வீட்டில் இருந்து வேலை" செய்யும் வசதியை தொடங்கியுள்ளது ?**

A. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
B. பஞ்சாப் நேஷனல் வங்கி
C. அலகாபாத் வங்கி
D. யூகோ வங்கி

**விடை: A. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா**

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சமீபத்தில் அவசர தேவைகளை கையாள மற்றும் வேலைக்கு செல்வதை தடுக்கும் சமயங்களில் மொபைல் சாதனங்கள் மூலம் வீட்டில் இருக்கும் போது ஊழியர்கள் வேலை செய்ய "வீட்டில் இருந்து வேலை" செய்யும் புதிய வசதியை அறிமுகம் செய்துள்ளது. எஸ்பிஐ, மொபைல் கணினி தொழில்நுட்பங்களை பயன்படுத்தும், இதனால் மொபைல் சாதனங்களில் உள்ள தரவு மற்றும் பயன்பாடுகளை நிர்வகிக்க மற்றும் பாதுகாக்க, அனைத்து செயல்படுத்தப்பட்ட சாதனங்களின் மீதும் ஒரு தொடர்ச்சியான கட்டுப்பாடு இருக்கும்.

**6. எந்த இந்திய நடிகை, ஆஸ்திரேலிய சர்வதேச திரைப்பட விழா மற்றும் (IFFAA) விருதுகளில் சிறந்த நடிகைக்கான விருதை வென்றுள்ளார் ?**

A. வித்யா பாலன்
B. பிரியங்கா சோப்ரா
C. ஐஸ்வர்யா ராய் பச்சன்
D. தீபிகா படுகோனே

**விடை: C. ஐஸ்வர்யா ராய் பச்சன்**

ஐஸ்வர்யா ராய் பச்சன், 2016 ஆம் ஆண்டு படமான 'Sarbjit'-ல் அவரது பாத்திரத்திற்காக ஆஸ்திரேலிய சர்வதேச திரைப்பட விழா மற்றும் (IFFAA) விருதுகளில் சிறந்த நடிகைக்கான விருதை வென்றுள்ளார். இத்திரைப்படத்தை ஓமுங் குமார் இயக்கினார். பாகிஸ்தானில் பயங்கரவாதம் மற்றும் ஒற்றனாக செயல்பட்டதாக தீர்ப்பளிக்கபட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்திய விவசாயி சரப்ஜித் சிங்கின் வாழக்கை வரலாறே “Sarbjit” ஆகும். இவர் 2013 ஏப்ரலில் லாகூரில் சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு, ஒரு சில நாட்கள் கழித்து இறந்தார். இப்படம், சிறையில் அவரது பயணம் மற்றும் அவரை விடுவிக்க அவரது சகோதரியின் முடிவற்ற சண்டையை காண்பித்தது.

**7. சமீபத்தில் மறைந்த எம் சந்தரகாசு (M Chandrakasu), எந்த துறையுடன் தொடர்புடையவர் ?**

A. விளையாட்டு
B. அரசியல்
C. ஊடகவியல்
D. திரைத்துறை

**விடை: B. அரசியல்**

முன்னாள் புதுச்சேரி அமைச்சர் எம் சந்தரகாசு(67), சமீபத்தில் தமிழ்நாட்டின் சென்னையில் காலமானார். இவர், காரைக்கால் எல்லைக்குட்பட்ட புறநகர் பகுதியான நெடுங்காடு தொகுதியை 6 முறை வழிநடத்தினார். 2011 ஆம் ஆண்டு ரங்கசாமி மூலம் அமைக்கப்பட்ட அனைத்திந்திய என் ஆர் காங்கிரஸ் (AINRC) அரசாங்கத்தில் இவர் விவசாயத்துறை அமைச்சராக இருந்தார்.

**8. இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் (National Archives of India) தலைமையகம் எங்குள்ளது ?**

A. புவனேஸ்வர்
B. புது தில்லி
C. போபால்
D. ஜெய்ப்பூர்

**விடை: B. புது தில்லி**

இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI), தனது 127-வது அறக்கட்டளை தினத்தை புது தில்லியின் ஜன்பத்தில் உள்ள அதன் தலைமையகத்தில் மார்ச் 11, 2017 அன்று கொண்டாடுகிறது. இந்திய அரசினுடைய தற்போதைய பதிவுகள் (non-current records) அல்லாதவற்றின் களஞ்சியமாக NAI விளங்குகிறது மற்றும் நிர்வாகிகளும், அறிஞர்களும் பயன்படுத்த அவற்றை பொறுப்பாக வைத்திருக்கிறது. கலாச்சார அமைச்சகத்தின் கீழ், கலாச்சார துறையின் இணைக்கப்பட்ட ஒரு அலுவலகமாக செயல்பட்டு வரும் இது, கல்கத்தாவில் 1891 ஆம் ஆண்டு மார்ச் 11-ஆம் தேதி இம்பீரியல் பதிவு துறையாக நிறுவப்பட்டது. போபாலில் ஒரு பிராந்திய அலுவலகத்தையும், புவனேஸ்வர், ஜெய்ப்பூர் மற்றும் புதுச்சேரி ஆகிய மூன்று பதிவு மையங்களையும் NAI கொண்டுள்ளது.

**9. அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (SERB) மூலம், பின்வரும் யார் 'SERB Distinguished Fellow' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார் ?**

A. லால்ஜி சிங்
B. தினகர் சளுன்கே
C. பி பி பெஹேரே
D. ஜே.சி.வில்லியம் போஸ்

**விடை: A. லால்ஜி சிங்**

உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் (CCMB) இயக்குனர் மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் (BHU) துணை வேந்தராக

பணியாற்றிய டாக்டர் லால்ஜி சிங், இந்திய அரசின் சட்டபூர்வமான அமைப்பான அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தின் (SERB) மூலம் 'SERB Distinguished Fellow' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். வயது முதிர்வு ஓய்வுக்கு பிறகும் சுறுசுறுப்பாக செயல்படும் சிறந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 'Distinguished SERB Fellowship Award' விருதை SERB உருவாகியுள்ளது. இவ்விருதில், மாதம் ஒன்றுக்கு ரூ.60,000 மற்றும் ஆராய்ச்சி மானியமாக ரூ.5 லட்சம் அடங்கும். ஆராய்ச்சி மானியம் மூன்று ஆண்டுகள் வழங்கப்படும் மற்றும் இதனை அடுத்த இரண்டு வருடத்திற்கும் நீட்டிக்கலாம். தற்போது, லால்ஜி சிங் ஹைதெராபாத்தில் 'ஜீனோம் அறக்கட்டளை' எனும் இலாப நோக்கற்ற நிறுவனத்தை இயக்குகிறார்.

**10. "From Inside the Steel Frame: The Memoirs of an Administrator" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. சுஜாதா சங்கமித்ரா
B. ஆர் சிவபிரியா
C. அசோக் பாண்டே
D. விகாஸ் ஸ்வரூப்

**விடை: C. அசோக் பாண்டே**

ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி டாக்டர் அசோக் பாண்டே, "From Inside the Steel Frame: The Memoirs of an Administrator" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். பீகாரின் ஒரு சிறிய கிராமத்தில் இருந்து தில்லியின் அதிகார நடைக்கூடம் வரை சென்ற அவரது பயணத்தின் ஒரு கணக்காக இந்த புத்தகம் உள்ளது.